2018 மார்ச் 20]

technology–*யுடன் அமைப்பதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வாக்கிற்கு நன்றி, வணக்கம்.*

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

58—

வணிக வரி அலுவலகக் கட்டடம்

***19351—திரு. ப. ஆடலரசன்:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் உள்ள வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, வணிக வரித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் வணிக வரி அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இவ்வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட திருத்துறைப்பூண்டி கிராமத்தில் புறம்போக்கு நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அரசின் நிதிநிலைமைக்கேற்ப சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.*

திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மண்ணின் மைந்தர் திராவிட இனத்தினுடைய*

சுய மரியாதைத் தலைவர் அவர்களையும், செயல் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் வணிக வரி அலுவலகங்கள் பெரும்பாலும் வீடுகளில் இயங்குகின்றன. அதனால் அந்த அலுவலகங்களில் கழிப்பறை மற்றும் போதுமான வசதிகள் இருப்பதில்லை. வணிக வரி அலுவலகங்களுக்கு வருகின்றவர்களுக்கு போதுமான கழிப்பறை வசதிகள் கிடைக்காத ஒரு சூழ்நிலை உள்ளது. குறிப்பாக வேதாரண்யம், தலைஞாயிறு, முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி போன்ற பகுதிகளிலிருந்தும் மற்றும் பஞ்சாயத்து செயலாளர் போன்றவர்களும் வணிக வரி அலுவலகத்திற்கு வரக்கூடிய ஒரு சூழ்நிலை உள்ளது. மேலும், வர்த்தக சங்கத்தினரும் அந்த அலுவலகத்திற்கு வந்து செல்கின்றனர்.

வணிக வரி அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கும்போது, அலுவலகத்திற்குண்டான அமைப்புகள் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஒரு வீட்டிற்குரிய வசதிகள்தான் செய்யப்பட்டுள்ள நிலையில், வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அலுவலகங்களில் அலுவலக அமைப்பு இல்லாத காரணத்தினால், வணிக வரி அலுவலகத்திற்கு வரக்கூடியவர்களுக்கு மிகவும் சிரமத்தை ஏற்படுத்துகிறது. இதைக் கருத்தில்கொண்டு வருகின்ற மானியக் கோரிக்கை விவாதத்தின்போது உடனடியாக அதற்குரிய அறிவிப்பை வெளியிட வேண்டுமெனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி வணிக வளாகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக, திருத்துறைப்பூண்டி கிராமத்தில் நிலம் தேர்வு செய்யப்பட்டு, தற்போது தஞ்சாவூர் துணை ஆணையர், வணிக வரித் துறை அவர்களின் நடவடிக்கையில் உள்ளது. வருவாய்த் துறையிடமிருந்து நிலம் மாற்றம் செய்யப்பட்ட பின், பொதுப் பணித் துறையிடமிருந்து கட்டட வரைபடத்திற்கான ஒப்புதல் பெற்று, நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் கட்டப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கு இருக்கக்கூடிய சூழ்நிலையை, அதாவது இல்லங்களில் வணிக வரி அலுவலகம் இயங்குவதாகத் தெரிவித்தார்கள். ஆகவே, இவையெல்லாவற்றையும் கருத்தில்கொண்டு முன்னுரிமை

2018 மார்ச் 20]

அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் இதனை எடுத்துரைத்து, விரைவில் கட்டடம் கட்டித் தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.*

திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்கு மிக முக்கியமான துறை என்பது வணிக வரித் துறைதான். வணிக வரித் துறையின்மூலம்தான் நம்முடைய அரசிற்கு அதிகமான வருவாய் வந்து கொண்டிருக்கின்றது. அந்த வருவாயை வைத்துதான் பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது. மற்ற வளர்ச்சிப் பணிகளுக்கும் அந்த வருவாய் பயன்படுகின்றது. அவ்வாறு அதிக வருவாய் வரும் அந்தத் துறைக்கு உரிய கட்டடம் இல்லாதது மிகவும் வருத்தத்தை அளிக்கக்கூடியதாக இருக்கிறது.*

அதேபோல் எங்களுடைய மன்னார்குடியில், கோட்டூர் பகுதியில் வணிக வரி அலுவலகம் இருக்கிறது. இதுவும் நகராட்சியினுடைய கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. அதற்கும் ஒரு சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தின் தலைநகரமாக விளங்கக்கூடிய திருவாரூர் பகுதியில் அதிகமான வணிகர்கள் இருக்கின்றனர். இப்போது இருக்கக்கூடிய வட்டாட்சியர் அலுவலகத்தின் மாடிப் பகுதியில் வணிக வரி அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கு இரண்டு அலுவலகங்கள் இருக்கின்றன. அமலாக்கப் பிரிவும் அங்கு செயல்பட்டு வருகின்றது. ஆகவே, அந்த இரண்டு அலுவலகங்களுக்கும் தேவையான கட்டடங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டும். எங்களுடைய மாவட்டத்திற்குத் தேவையான நிதிகளை உடனடியாக வழங்கி, வருகின்ற மானியக் கோரிக்கை விவாதத்தில் அறிவிப்பாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுக்கு ஆறுதல் தரும் வகையில், விதி 110–ன்கீழ் அறிவிப்பாக வெளியிட வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொண்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றி சொல்லி விட்டார். உட்காருங்கள்.*

[2018 மார்ச் 20

வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

59—

சொந்தக் கட்டடம்

***7369—திரு. அ. மருதமுத்து:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, பேளூர் கிராமத்தில் உள்ள தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கெங்கவல்லி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்விக்கான பதில். கெங்கவல்லி தொகுதி, பேளூர் கிராமத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து அவர்கள்.*

திரு. அ. மருதமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்த உலகத் தமிழர்களின் நெஞ்சங்களிலும், இல்லங்களிலும் வாழ்ந்து மறைந்து, வங்கக் கடலோரம் துயில்கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு இதய தெய்வம்*